உ

திருச்சிற்றம்பலம்.

மாரிமுத்துப்பிள்ளையவர்களால்

இயற்றிய

சிதம்பரமென்னும்

# திருப்புலியூர் வெண்பா

மூலபாடம்.

இஃது

சென்னை:

ஊ - புஷ்பரதசெட்டியாரால்

கலாரத்நாகரம்

என்னும் தமது அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1891.

கணபதிதுணை.

# புலியூர் வெண்பா.

## காப்பு.

நேரிசை வெண்பா.

பொன்னூரு மில்லைப் புலியூர்வெண் பாவுக்குப்
பன்னாளு மேத்திப் பணிகுவாம் - நன்னாரி
கக்குஞ் சரப்பூங் கடுக்கையா னீன்றகற்ப
கக்குஞ் சரப்பூங் கழல்.

## நூல்.

சொற்செறிவே தாந்தச் சுடர்த்தகர வித்தையதாம்
பொற்சபைநின் றோங்கும் புலியூரோ - முற்சமனை
வீசுபதத் தானடித்தார் விற்கொண் டமர்விளைத்த
பாசுபதத் தானடித்தார் பற்று. (க)

தங்கரும நீத்ததுன்ம தன்முனடங் காணநிரம்
புங்கதியைத் தந்த புலியூரோ - கங்கையதி
மோகரத்தர் மாசடையார் மோதலையுப் பற்றவருட்
சாகரத்தர் மாசடையார் சார்பு. (உ)

பாதகஞ்செய் துற்சகனும் பண்டிறக்கக் கண்டுகதி
போதவுவந் திட்ட புலியூரோ - வேதன்
சிரமதலை யக்கணித்தார் சேர்த்துநர சிங்கத்
துரமதலை யக்கணித்தா ரூர். (ங)

நற்கதியைத் துற்றெரிச னன்மறையோ னுட்களி
க்கப், பொற்கொடையா நல்கும் புலியூரோ-சொற்கி
ளர்நா, லாரணமா றங்கத்த ரம்பவள மேனியினோர்
நாரணமா றங்கத்தர் நாடு. (௪)

தாண்டுபுலிக் கால்கையுகிர் தானார் மழமுநிவன்
பூண்டிருந்தர்ச் சிக்கும் புலியூரோ - பாண்டியற்கா
மாணிக்கங் காட்டினார் மாமறைப்பா லன்பாலோல
வெணிக்கங் காட்டினார் வீடு. (௫)

தத்துதிரைப் பாலுததி தன்னையழும் வெம்புலியின்
புத்திரனுக் கீயும் புலியூரோ - பத்தித்
தவந்தழைத்த சித்தனார் தாஞ்சமைத்த சேயை
யுவந்தழைத்த சித்தனா ரூர். (௬)

மெய்திகழுஞ் சேடனுரு விட்டுப் பதஞ்சலியாய்ப்
பொய்கையுழி வந்த புலியூரோ - வையை
வரம்புகட்டு வாரரனார் மாமுநிக்குப் பாற்சா
கரம்புகட்டு வாரரனார் காப்பு. (௭)

மாசிலா வம்புலிக்கு மாதுமைக்கு மாநடத்தைப்
பூசமதிற் காட்டும் புலியூரோ - பேசரிய
வித்தகத்தார் கண்டிறந்தார் வீடுறச்செய் தங்கசற்கா
மத்தகத்தார் கண்டிறந்தார் வாழ்வு. (௮)

முன்னாகச் சிங்கவன்மன் மூழ்கச் சிவதடத்திற்
பொன்னாக மாக்கும் புலியூரோ - யொன்னார்க்காக்
குன்றுவளை விற்போர் கொளவெடுப்போர் கூடற
சென்றுவளை விற்போர் செறிவு. [னிற்

அள்ளியவா யோதனமொன் றந்தணன்வாய் வீழ்
த்தகொடிப், புள்ளருள்பெற் றுய்யும் புலியூரோ - யுள்
ளமது, சோதிக் கவருவார் தொண்டரோ டுன்வச
மென், றோதிக கவருவா ரூர். (௧௦)

சென்றே நலந்தீது செய்யிலொன்று கோடியதாய்ப்
பொன்றாது நீடும் புலியூரே - நின்றாடும்
பொன்னம் பலவர் புகன்மறையி னாலுணரா
வன்னம் பலவர் மனை. (கக)

மாக்கள்வினை பால வயிரவன்கைச் சூலத்தாற்
போக்கிநலந் தந்த புலியூரே - சாக்கியர்கள்
மோதக கனிவிருந்தார் முன்வைசிய மாதளித்த
சூதக் கனிவிருந்தார் தோய்வு. (கஉ)

சொல்லாச் சிவசன்மா சோமநா தற்குவினைப்
பொல்லாங் ககற்றும் புலியூரே - வில்லா
வணக்குஞ் சமர்த்தினார் மாமலைதோண் மென்மா
சுணக்குஞ் சமர்த்தினார் தோய்வு. (கரு)

ஆழ்ந்தகடற் செல்வற் கடர்பிரம கத்திதனைப் [த்
போழ்ந்தறுத்தா ளுந்தென் புலியூரே - தாழ்ந்தவரை
துய்யகதி யேற்றினார் சோதிவெள்ளி வெற்பனைய
வெய்யகதி யேற்றினார் வீடு. (கச)

வன்மதிநீ சன்கடனீர் மாசிமகத் தாடவவன்
புன்மைதவிர்த் தாளும் புலியூரே - தென்மதுரைக்
கற்களிறுக் கிக்களித்தார் கானவனெச் சிறசுவைக்க
பற்களிறுக் கிக்களித்தார் பற்று. [ப்

மேவுநடுக் கங்கடமை வீட்டியெவர்க் குங்காயாம்
பூவண்ணன் காக்குந்தென் புலியூரே - கோவணஞ்சீர்
தட்டிடவென் றேற்பினார் தம்பிறவி வல்லிருளை
யட்டிடவென் றேற்பினா ரார்வு. (கரு)

நேயமனை யாளுடனே நீலகண்ட னார்முதுமை
போயிளமை பெற்ற புலியூரே - தீயமலத்
தோடும்போ தங்கெட்டா ருள்ளத்தா ரன்றிருவர்
தேடும்போ தங்கெட்டார் சேர்வு. (கஎ)

அன்னாட் சிகைவிளக்கேற் றன்பினுக்கு முத்திகணம்
புன்னையர்க் கீயும் புலியூரோ - யெந்நாளு
மன்பர் கருத்துடையா ரன்பரிடத் தன்பில்லா
வன்பர் கருத்துடையார் வாழ்வு. (கஅ)

தாவோமதத் தானீசந் தான்போய்க் கதிநாளைப்
போவோமென் பார்சேர் புலியூரோ - மாவாகச் [வி
சம்புவைச்செய் தேமுனிந்தார் தந்தவத்தி சாயவில்
லம்புவைச்செய் தேமுனிந்தா ரார்வு. (கசு)

சிற்ககனத் தற்சொருபச் சீரகத்தைச் சேந்தனுமுன்
புற்கையிட்டுப் பெற்ற புலியூரோ - நற்கொடிக்கோர்
தாயுமா னார்கொடியார் தங்கள்வினைத் தீங்கொடியார்
பாயுமா னார்கொடியார் பற்று. (உ0)

விண்டலமே போற்றும் விராட்புருட னரிதய
புண்டரிக மான புலியூரோ - சண்டன்வலி [ருக்கன்
மைத்தாம் பொழிவித்தார் வத்தொடுமார்க் கண்ட
னைத்தாம் பொழிவித்தார் பற்று. (உக)

குஞ்சிதத்தாள் கண்டவனாக கும்பிடப்பெற் றோ
ர்கள்விரும், புஞ்சிவவீ டெய்தும் புலியூரோ - செஞ்
சடையிற், சின்ன விளம்பிறையார் தில்லைமறை யோ
ருருநா, மென்ன விளம்பிறையா ரில். (உஉ)

தேவமறை யாகமங்க டென்கயிலை யென்றுதொழப்
பூவுலகி லோங்கும் புலியூரோ - மூவுலகும்
வந்துதிக்கு முன்புணர்வார் வாழ்வருள வப்பர்தம்பா
தந்துதிக்கு முன்புணர்வார் சார்பு. (உங)

நன்மாத வத்தொருவ னாடும் படிக்கிரங்கிப்
பொன்மாரி பெய்யும் புலியூரோ - முன்மார்பிற்
பன்னகத் தந்தார் பகர்தமிழ்க்காச் செங்கறனைப்
பொன்னகத் தந்தார் புரி. (உச)

நாமகடென் கீழ்த்திசையி ளுட்டுங் குணதிசையிற்
பூமகளர்ச் சிக்கும் புலியூரோ - தாமலதோ
ராதரவில் லார்வாழ்த் தடியர்தமக் கங்கையிற்பொற்
பூதரவில் லார்வாழ் புரம். (உரு)

வாசனைசேர் மாமலரான் மாமறைமூ வாயிரவர்
பூசனைசெய் தேத்தும் புலியூரோ - யோசைதரு
பாறசங் கரியார் பதுமத் திருக்கணிந்தோர்
பாற்சங் கரியார் பதி. (உகூ)

ஓதுபசி யாலெருவை யுண்ணவிறக் குங்கயற்கப்
போதுகதி நல்கும் புலியூரோ - பூதிவெகு
வாயிடுமா கத்தனுர் வன்கமர்வாய் மாவடுவை
வாயிடுமா கத்தனுர் வாழ்வு. (உஎ)

பத்தனைக்கொண் டேபேசாப் பாவைதனைப் பே
சுவித்துப், புத்தனையாட் கொள்ளும் புலியூரோ-முத்
திதரும், பஞ்சாக் கரனுர் பணிவார் வினையழன்முன்,
பஞ்சாக் கரனுர் பதி. (உஅ)

கண்ணுறுபோ தேபவத்தைக் காய்ந்தருளு மீரைந்து
புண்ணியதீர்த் தஞ்சேர் புலியூரோ - பெண்ணொருபா
கத்திருந்தார் கட்டரியார் கைகூப்பி நின்றுதுதிக்
கத்திருந்தார் கட்டரியார் காப்பு. (உகூ)

முத்தீ யிடையினவி முந்தச் சொரிந்துமறைப்
புத்தேளோ மஞ்செய் புலியூரோ - மெய்த்தோளின்
மாதுளவ னத்தன் வணங்குபத ளுகத்தோர்
மாதுளவ னத்தன் மனை. (ஙo)

ஓர்கலையெங் கெங்கு முலாவியர்த்த யாமத்திற்
பூரணமா யொன்றும் புலியூரோ - காரணமாம்
பார்த்தாண் டவனுர் பணிந்தாலு முள்ளன்பைப்
பார்த்தாண் டவனுர் பதி. (ஙக)

சோதிவனை மும்மடியாய்த் தோன்று தெவர்க்குமனு
பூதிவெளி யாகும் புலியூரே - மாதெனவங்
கந்தரவல் லாறுளுங் கைக்கொளப்பொற் றுளமிடுங்
கந்தரவல் லாறுளுங் காப்பு. (௩௨)

வானமுல கேத்துதுரு வாசர்பசி யாறவுமை
போனக மளிக்கும் புலியூரே - யானசம
நம்பத் துவிதத்தார் நாடரியார் மோனத்தார்
நம்பத் துவிதத்தார் நாடு. (௩௩)

வாணகையாற் றீபுரத்தின் வாழ்மூ வனைக்காவல்
பூணவளித் தாளும் புலியூரே - யாணவமா [ண்
மெய்க்கருத்து வந்தனையான் மிக்குழலா மிக்கோர்க
மெய்க்கருத்து வந்தனையான் வீடு. (௩௪)

சம்பந்தர்க் கந்தணர்க டம்மைச் சிவகணமொப்
பும்பண்ணைக் காட்டும் புலியூரே - யம்புலிவா
னெட்டாக மஞ்சார்ந்தா னேத்தமறை யோடிருபா
னெட்டாக மஞ்சார்ந்தா னில். (௩௫)

வைத்தவரு ளாற்கோவை வாதவூ ரன்புகலப்
புத்தகத்திற் றீட்டும் புலியூரே - துத்தியரா
வானத் தமரிந்தார் மாமவுலி யாமெழுநா
வானத் தமரிந்தார் வாழ்வு. (௩௬)

சீருற் றசரீரி சேக்கிழார்க் காதிமொழி
பூரித் துரைக்கும் புலியூரே - நீரைக்
கரந்துவைத்த வேணியார் காதினிற் றுவிக்கூய்க்
கரந்துவைத்த வேணியார் காப்பு. (௩௭)

வாட்கையச வாணிபன்சொன் மாநூ லினைப்படிக்கற்
பூட்கையெடுக் கக்கொள் புலியூரே - தாட்கமலப்
போதுள வனத்தன் புருகூதன் போற்றுமந்திப்
போதுள வனத்தன் புரி. (௩௮)

ஆசையெட் டினுக்கிறையு மாசையெட்டி யாசை
விடப், பூசையிட்டுப் போற்றும் புலியூரோ - பேச
வெட்டா, வேதாந்த ரும்பரமர் விண்ணு டளந்தபெரு
ல்லே, வேதாந்த ரும்பரமர் வீடு. (௩௯)

சூரியனும் பச்சைத் துழாய்முகிலும் பூசனைசெய்தன்
பூருவதிக் கிற்செய் புலியூரோ - கூறியவே
லாறு முடிக்குமா னுலுபதே சம்பெறுவா
னாறு முடிக்குமர னூர்வு. (௪0)

மேனிலத்தொப் பாலயங்கண் மெய்க்கவுடர் கோ
ன்செழுஞ்சாம், பூனதத்தாற் செய்யும் புலியூரோ -
ஞானமுற்ற, சம்பந் தரத்தர் தராதலமெ லாம்புண
ருஞ், சம்பந்த ரத்தர் தலம். (௪௧)

உக்கிரசா முண்டியும்பண் ணேர்த்தநடத் தானும்
புக்குவந்தித் தேத்தும் புலியூரோ - யக்கு
வலையங் கழுத்துளவன் வாரியின்மீ னுக்கா
வலையங் கழுத்துளவன் வாழ்வு. (௪௨)

மாதவத்து மாணிக்க வாசகர்மன் றுள்ளொளிக்கு
ட், பூதியத்தோ டொன்றும் புலியூரோ - கேதகைப்
பூந், தாமங் கழித்தளிப்பார் தன்னுடைண்ட மூழி
தொறுந், தாமங் கழித்தளிப்பார் சார்பு. (௪௩)

நாட்டமுறு மாகிமக நாள்வணிகன் பாசவினைப்
பூட்டறுத்தா னுந்தென் புலியூரோ - மாட்டி
லெழுதுங் காப்பரனு ரோட தனிற் கோவை
யெழுதுங் காப்பரனு ரில். (௪௪)

செப்புநடத் தைத்தே சிகநமசி வாயர்களிப்
புப்பெறக்காட் டுந்தென் புலியூரோ - யொப்பதிலா
வோரோற்றி னுன்மறையா னுள்ளத் திரங்குமடி
யோரோற்றி னுன்மறையா னூர். (௪௫)

நந்திமுதற் றேவர்பலர் ஞானமுனி வோர்பூசை
புந்திமகிழ்ந் தேத்தும் புலியூரே - தந்தனையைக்
காமருகே சஞ்சரிப்பா ரன்பினுக்கு முத்தியிட்டோ
ராமருகே சஞ்சரிப்பா ரார்வு. (சசு)

வன்பர்புலை யோரொனினும் வாசஞ் செயிலவர்தம்
புன்பிறவி மாற்றும் புலியூரே - யன்புதிகழ்
வத்திரங்க ளேந்தார் வனத்திருடி மாதரிடை
வத்திரங்க ளேந்தார் மனை. (சஎ)

சாதல்பிறப் பைப்புலைப்பெற் றானுக் குமாபதியாற்
போதல்செய் வித்த புலியூரே - சோதிப்
பரசங் கரனார் பனிமதிசூ டுந்தற்
பரசங் கரனார் பதி. (சஅ)

நாட்டிலிறந் தோரான்மா நல்லென்பவ் வெல்லைத
னிற், போட்டிடவீ டெய்தும் புலியூரே - கோட்டிப
மூர், வாசவன சத்தினன் வாழ்த்தித் தொழுஞ்சர
ண, வாசவன சத்தினன் வாழ்வு. (சகூ)

ஏழுலகேத் தொன்பா னிலிங்கப் பிரதிட்டை
பூழியர்கோன் செய்த புலியூரே - வாழ்சிவலோ [ச
கத்தர்கணிச் சிப்படையார் காதலித்துன் னுதநெஞ்
கத்தர்கணிச் சிப்படையார் காப்பு. (ருo)

ஆனபல சத்திரத்து மாழ்கமல வாவியினும்
போனகம்பா லிக்கும் புலியூரே - யானெனுந்தற்
போதமொழி வாயினார் புந்திச் சுடரொளியார்
வேதமொழி வாயினார் வீடு. (ருக)

ஓதிமமும் வேந்த ருலவுநெடு வீதிகளும்
போதகமே நிற்கும் புலியூரே - மாதவர்க்கு
வீடளித்தார் மாட்டினார் வேணிபுய மீதிதழி
யேடளித்தார் மாட்டினா ரில். (ருஉ)

மாத்தயங்கு சோலைகளும் வந்தவப்பர் தாழுமகிழ்
பூத்தழைக்கப் பாடும் புலியூரோ - வாய்த்தபுலி
யோடப் பதஞ்சலியா ருண்மகிழ மன்றினட
மாடப் பதஞ்சலியா ரார்வு. (ருங)

கட்பங் கயமின்னார் கார்க்குழலி லந்தியினிற்
புட்பஞ் சரஞ்சேர் புலியூரோ - நட்பினொடு
மெச்சிக்கும் பிட்டார் மெலிவொழிப்பார் வந்தியிட
விச்சிக்கும் பிட்டா ரிடம். (ருச)

சாரொலிநீ டாவணமூங் தம்பதியை மாதருங்கற்
பூரமணந் துன்னும் புலியூரோ - பாரினுட
னூதையங் கியம்புவா னுட்புறம்பான் வேசிபக்கற்
றூதையங் கியம்புவான் றேய்வு. (ருரு)

மீத்தா விமகரனை மீன்பாய்ந் தரம்பையினைப்
பூத்தா றுடைக்கும் புலியூரோ - கூத்தாடிப்
பாதஞ் சிவந்தார் பழிக்கால வாயினிலோர்
போதஞ் சிவந்தார் புரி. (ருசா)

அற்பகற்சோட் டன்றிலன்பா லாந்தவத்தா லும்பரு
புற்பதிமே லாகும் புலியூரோ - வெற்பினுரு [க்கும்
வந்தக் கழலொளியார் மன்றுளெவ ருக்குமர
விந்தக் கழலொளியார் வீடு. (ருஎ)

மாவனஞ்சூழ் காவிடத்து மாலுறுமின் னாரிடத்தும்
பூவைவண்டே துங்தென் புலியூரோ - நாவலைந்து
பிட்டிரத மென்றார் பிரமப்பா காகொணர்வா
தட்டிரத மென்றார் தலம். (ருஅ)

பண்டுதவஞ் செய்திடவும் பள்ளரலத் தாலுழவும்
புண்டரிக மல்கும் புலியூரோ - விண்டுமறை
வேந்துமறி யாரிருக்கு மேயறியார் தீயகலோ
டேந்துமறி யாரிருக்கு மில். (ருகூ)

சாற்றுதிருத் தொண்டருஞ்செய்ச் சங்கினமு முந்து
போற்றவளை மிகக புலியூரோ - யேற்றுருவாய்ச் [மதி
சங்கத் தரங்கத்தர் தாங்கமகிழ் வோருமையோர்
பங்கத் தரங்கத்தர் பற்று. (௬0)

தெள்ளிமையோர் போற்றுதொறுந் தேம்பொழி
ரே றுங்கனிச்செம், புள்ளிவரு மால்சேர் புலியூ
ரோ - வெள்ளிச், சயிலத் திருப்பார் சனிப்பிறப்பி
லென்னைப், பயிலத் திருப்பார் பதி. (௬௧)

தங்கவவை சேவிக்கத் தண்ணறைவண் டுண்ணவ
ரும், புங்கவரோ சேரும் புலியூரோ - யங்கைதனி, வே
ந்துதலை யோட்டினு ரோத்துமன்பர் தாய்முலைப்பா
ன், மாந்துதலை யோட்டினுர் வாழ்வு. (௬௨)

முத்திதரும் பூசையென்று மூஷைதனைப் பேசிடென்
புத்தரவ மாற்றும் புலியூரோ - சித்திமதி [று
நேமித்தா ரத்தனுர் நித்தியகல் யாணிசிவ
காமித்தா ரத்தனுர் காப்பு. (௬௩)

சொற்பழுத்த மாமுனியுஞ் சூழுந் துறவினரும்
புற்பதத்தை யாரும் புலியூரோ - யுற்பவித்த
கஞ்சமனை வீட்டினுர் கம்பறித்தார் செம்பதத்தால்
வெஞ்சமனை வீட்டினுர் வீடு. (௬௪)

நன்குற்ற மாதருமங் நல்லார்கண் முன்றில்களும்
பொன்கற் படுக்கும் புலியூரோ - மென்கட்
கமலவடி வந்தியார் கட்கருளார் ஞான
வமலவடி வந்தியா ரார்வு. (௬௫)

தேம்பொழின்மேற் சேல்பாயச் செங்கழையை
மேதியுண்ணப், பூம்பழனஞ் சாரும் புலியூரோ - மே
ம்படுமென், டோளுக்கா சைப்பட்டார் தொண்டா
மியற்பகையில், லாளுக்கா சைப்பட் டா ரார்வு. ()

கார்ப்புணர்ப்பிற் பொற்கலையைக் காமுகர்க்கா
வேள்வரவைப், போர்ப்பவனன் பார்க்கும் புலியூ
ரோ - பார்ப்பதியாம், பெண்டனு கத்தடுத்தார் பேர்
மணத்திற் சுந்தரனைத், தொண்டனு கத்தடுத்தார்
தோய்வு. (சுஎ)

தென்னூர் பொழிலிடத்துஞ் செங்கனக மன்றிடத்
புன்னைகத் தோடார் புலியூரோ - நன்னீமை [தும்
விட்டுவிளக் கிட்டார் வினைதுலைத்தார் மாட்டினுமன்
பொட்டுவிளக் கிட்டா ருறைவு. (சுஅ)

பெட்பின்முகில் கண்டாற் பிறந்திறந்தா லெற்றோ
புட்பரதங் காட்டும் புலியூரோ - யுட்பரிவாற் [கைப்
கையார மாயுணைத்தார்க் காத்தாற்கீழ் நாலுவர்க்
கொய்யார மாயுணைத்தா ரூர். (சுகூ)

கட்டுறுகோட் டுப்பூக் கமலப்பூத் தேனூறிப்
புட்டரிக்க வீறும் புலியூரோ - சிட்டர்தொழ
மின்னு டகத்தினன் மேய்ந்தமன்று ளானந்த
நன்னு டகத்தி னூடு. (எ0)

மேகம் பயில்குழலார் மென்களமுந் தண்பணையும்
பூகம் பொருவும் புலியூரே - மாகமொடு
தாலம் பணிந்திடுவார் தாழ்பவளக் கோடீர
மேலம் பணிந்திடுவார் வீடு. (எக)

கங்குல்வாய்த் தீபங்க ளுக்கும்வெயி லுக்குமணிப்
பொங்கரா வீடாம் புலியூரோ - சங்கரா
வென்பா ரிடத்தினு னீமத் திடைநடித்த
வன்பா ரிடத்தினன் வாழ்வு. (எஉ)

அல்லிச் சுனைகளினு மாலையினு நாரியே
புல்லிக் குடையும் புலியூரோ - கல்லிற் [ன்
றலையைத்தா மோதினார் தம்மையாண் டென்னெ
கலையைத்தா மோதினார் காப்பு. (எரு)

வெற்பிணைக்குங் கொங்கைமின்னார் வீடுஞ்செந் தாமரையும், பொற்பளிக்குஞ் சாரும் புலியூரோ - கற்புணையா, வோதங் கடந்துவந்தா ரோதுதமிழ்க் கொண்டிருபொற், பாதங் கடந்துவந்தார் பற்று. (எச)

மிக்ககதிர்த் தேர்விசும்பை மேலோர் தவத்தைவிருப் [ப்
புக்களவித் தாக்கும் புலியூரோ - சக்கரத்தை
நந்தரிக்கிட் டன்புடையா னானுஞ் சிவகாம
சுந்தரிக்கிட் டன்புடையான் றேய்வு. (எரு)

மன்னுமலை தந்துவந்து மாக்களிற்றைப் பெற்றுமை [நேர்
பொன்னிநதி சூழும் புலியூரோ - சென்னிமதிப்
பெம்மா னிடக்கையான் பேரம் பலத்தாடுஞ்
செம்மா னிடக்கையான் சேர்வு. (எசு)

மேதகுவிண் டாவுறலான் மேலம் புலியுறலாற்
பூதரமொப் பாகும் புலியூரோ - மோதிப்
பொருமாதங் கத்துரியார் போற்றுலகீ ரேழுந்
தருமாதங் கத்துரியார் சார்பு. (எஎ)

அங்காடி யாங்கம் பலசங்கா ரஞ்செறிவாற்
பொங்காழி நேராம் புலியூரோ - சங்காழி
மாலாஞ் சரத்தர் மணமலிசெம் பொன்மடலைப்
போலாஞ் சரத்தர் புவி. (எஅ)

வாய்ந்த வலம்புரிப்பூ மாத்தழுவி நந்தவனம்
பூந்துளவத் தோனும் புலியூரோ - யாந்தமலர்ச்
செங்கைக் குழையினார் திண்டோ டொடுங்காதிற்
சங்கைக் குழையினார் சார்பு. (எகூ)

தாலம் படைத்தலர்க்கட் டாளெழுக லாற்பிரமன்
போலும் பொழில்சூழ் புலியூரோ - யால
மருந்தக்கண் டங்கறுப்பா ரல்லல்வினை யன்பர்
வருந்தக்கண் டங்கறுப்பார் வாழ்வு. (அ0)

மின்னுமணி வேழத்தான் மேவரம்பை யால்வய
ல்கள், பொன்னுலகுக் கொப்பாம் புலியூரோ - யுன்
னியொரு, கானமா வென்றூர் தருத்துற் றுருத்தெ
திர்ந்த, தானமா வென்றூர் தலம். (அக)

மாகமுறைந் தாமைவெள்ளை வாரணமூர்ந் தோடை
போகிநிக ராகும் புலியூரோ - தோகைமயிற் [மகப்
புள்ளே றிவருவார் போதமழ லைக்குவந்தார்
வெள்ளே றிவருவார் வீடு. (அஉ)

தேன்றிகழு மாமலரேந் திப்பரவித் தாழ்ந்தடியார்
போன்றகழி சூழும் புலியூரோ - யூன்றி
யுளத்தி னயனத்த னுவந்துதொழு தேத்துங்
குளத்தி னயனத்தன் குடி. (அங)

ஆசின்மதி னூலளவிட் டாங்குயர்ந்து நீறணிந்து
பூசுரர்போ லாகும் புலியூரோ - மாசு
கழலாத வன்மதியார் கண்ணுறூர் கண்ணு
மழலாத வன்மதியா ரார்வு. (அச)

எற்கோ வனையா கிவரலா லைங்கரனேர்
பொற்கோ புரஞ்சேர் புலியூரோ - நற்காற்
கிசைக்குஞ் சிலம்பினு னீராம் முகத்தா
னசைக்குஞ் சிலம்பினு னூர்வு. (அரு)

காற்காட்டி யாறுதலை காட்டியடுத் தோர்க்கயில்வே
போற்கா வனஞ்சூழ் புலியூரோ - பாற்கோலக் [ள்
குட்டிக்கங் கூட்டினர் கொச்சைமுக மாமனுக்கன்
றொட்டிக்கங் கூட்டினு ரூர். (அசு)

மெய்ப்பவங்காய்ந் தங்கமல மிக்கசிவ கங்கையது,
பொய்ப்பின்மறைக் கொப்பாம் புலியூரோ - மைப்ப
னைபோற், றெங்கத் தனுக்கையர் தூயநெடு மால்வ
னையாந், தங்கத் தனுக்கையர் சார்பு. (அஎ)

காலா யிரத்தாற் கதிர்மணிச்சூட் டாற்சேடன்
போலா லயஞ்சேர் புலியூரோ - பாலாழி
தந்தநஞ்சு மப்பார் தமையுங் களஞ்சடையிட்
டிந்தநஞ்சு மப்பா ரிடம். (அஅ)

தக்க கலைதெரிய நன்னூல்வி யர்சனையொப்
புக்கொடிக்கம் பஞ்சேர் புலியூரோ - யெக்கியத்திற்
பல்லுக்கெட் டாதவனூர் பாறப் புடைத்துமறைச்
சொல்லுக்கெட் டாதவனூர் தோய்வு. (அகூ)

பாடுமிசை யாற்றனக்கும் பத்தாற் சினகரம்வெண்
பூடணமின் னுளாம் புலியூரோ - வேட
னடித்தரிக்குங் கோவா ரமரர்துய ராலங்
குடித்தரிக்குங் கோவார் குடி. (கூ0)

வான்மீ தெழும்புகையான் மாவிரதத் தாற்கதிரோ
போன்மா மகஞ்செய் புலியூரோ - தேன்மாறுத் [ன்
தோடா யிரந்தான் றலங்கம் புயன்றலையை
யோடா யிரந்தா னுறைவு. (கூக)

ஆங்கருணை யோடமுதீங் தங்கலை நீக்கிமடம்
பூங்கலையிங் தொப்பாம் புலியூரோ - வாங்கும்
வரங்கம் பலவாணன் வாயில்காத் தன்பர்க்
கிரங்கம் பலவாண னில். (கூஉ)

ஐயம்பெய் தேதா ரணிமகிழ்ட் டங்கசன்போற்
பொய்யில்சத்தி ரஞ்சூழ் புலியூரோ - யையரவு
மீதாம்புயத்தினூர்மிக்கமுயன்மேலழுத்தும்
பாதாம் புயத்தினூர் பற்று. (கூங)

மாற்புணர்ந்து நீறணிந்து மாமதிமே லிட்டுயர்ந் தோர், போற்பலமா டஞ்சேர் புலியூரோ - சூற்பெறு வெண், கோடுங் தலைவளைப்பார் கூப்பமறைச் சேய்க் கயன்முன், றேடுங் தலைவளைப்பார் சேர்வு. (கூச)

எப்போது நன்மணந்தோய்ந் தேற்பவர்க்கிட் டை
ந்தருவொப், புப்பேசும் வீதிப் புலியூரோ - மெய்ப்
பான, நந்திப் பரியார் நளினத் தயனரிக்குஞ், சந்திப்
பரியார் தலம். (௯௫)

சோபனத்தைச் சேர்ந்துசெங்கோற் றூக்கியுயர்
தோரணந்தான், பூபதிக்கொப் பாகும் புலியூரோ -
தாபரவெண், டிக்கெனுமா சாரத்தார் சிட்டர்நெஞ்
சுட டித்திக்கு, மிக்கெனுமா சாரத்தா ரில். (௯௬)

அம்மழைக்கண் ணூற்காலா லாடுதலாற் கேதனங்
கள், பொம்மன்முலை யாராம் புலியூரோ - சம்மதியா
ய்ப், பொங்கரவி னன்பணிவார் பொற்சடைக்கிட்
டோர்கிரணச், செங்கரவி னன்பணிவார் சேவு. ()

மாலகல முற்று மணிவடம்பூண் டிந்திரையாள்
போலிரத மூரும் புலியூரோ - பாலனைக்கொல்
வானகத்தை யூன்றினார் வாளரக்கன் மாமுடிமேற்
கானகத்தை யூன்றினார் காப்பு. (௯௮)

செல்வந் திருந்திடலாற் சேர்முடத்தாற் பிங்கல
னேர், புல்லுந்தெங் கோங்கும் புலியூரோ - மெல்
லிதழ்வாய், விண்ட கடுக்கையார் மேனா ளமரருக்
கா, வுண்ட கடுக்கையா ரூர். (௯௯)

மாகமண்ட லந்தாங்கி வண்டமிழ்பூத் தாறுவிட்டுப்
பூகமுங்கும் பன்சீர்ப் புலியூரோ - யாகமங்கள்
கூறிடுமா வாக்கினார் கூடலிறைக் காநரியை
யேறிடுமா வாக்கினா ரில். (௧௦௦)

மன்னுபுலி யூர்க்கு வகுத்தவெண்பா நூறவற்றி
லுன்னி லிருபத்தைந் தோர்வயனம் - பின்னுமுள
வையைந் தொருவயன மையைந் தொருவயன
மையைந் தொருவயன மாம். (க00

புலியூர்வெண்பா

முற்றிற்று.